இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் [திருச்சீரலைவாய்]

# கந்த சஷ்டித் திருவிழா 2018

## அழைப்பிதழ்



பெறுநர்

இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் [திருச்சீரலைவாய்]

# கந்த சஷ்டித் திருவிழா 2018

## அழைப்பிதழ்



### கந்த விரத ஆறாம் நாள் திருவிழா

நாள் : 13.11.2018 - செவ்வாய்கிழமை

உ
செந்தில் ஆண்டவர் துணை

இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்
# திருச்செந்தூர். (திருச்சீரலைவாய்)

# 2018 ஆம் ஆண்டு
# கந்தசஷ்டித் திருவிழா அழைப்பிதழ்

"வந்தவினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கலங்கிடுமே செந்தில் நகர்
சேவகா என்று திருநீ(று) அணிவார்க்கு
மேவ வாராதே வினை"

ஆறுபடை வீடுறை அழகன், ஆறமர்ச் செல்வன், ஆதிசிவன் மைந்தன் அழகுமிகு பாலன் அமர்ந்து அருளாட்சி செய்து வரும் படைவீடு ஆறனுள் இரண்டாவதாக வைத்து எண்ணப்படுவது திருச்சீரலைவாய் எனப்படும் திருச்செந்தூராகும். "கயிலை மலையனைய செந்திற்பதியின்" தொன்மை பற்றியும் தொல்லுலக ஆண்டவனை பற்றியும், புலவர்கள் பலர் பாடிப் பரவியுள்ளனர்.

"திருமணி விளக்கின் அலைவாய்" என அகநானூறும் "வெண்டலைப் புணரி அலைக்குஞ்செந்தில்" எனப் புறநானூறும், "சீர்கெழு செந்தில்" என சிலப்பதிகாரமும், "உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீரலைவாய்" என திருமுருகாற்றுப்படையும் செந்திலம்பதியின் புகழ்பாடுகின்றன.

"முருகனே செந்தில் முதல்வனே, உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்" "காக்கக் கடவிய நீ" எனும் பண்ணார்ந்தப் பாடல்களை நக்கீரர் பாடி நலம் பெற்ற ஊர். "செந்தில் மாமலையுறும் செங்கல் வராயன்" என பாலன் தேவராய சுவாமிகளாலும் "தேவர் சிகாமணி, சித்தர் சிகாமணி, தெள்ளறிவுத் தூவர் சிகாமணி, யோகர் சிகாமணி, தோமிலடகவி நாவர் சிகாமணி, நாதர் சிகாமணி, நண்ணுமெென்னுள் மேவு சிகாமணி செந்தியில் வாழ்வடி வேலவனே." எனச் செந்திற்கலம்பகமும், குமரகுருபரரின் "கந்தர் கலிவெண்பாவும்" பகழிக் கூத்தரின் "திருச்செந்தூர் பிள்ளைத்தமிழும்" "கும்பமுனி கும்பிடுந் தம்பிரானே" எனும் அருணகிரிநாதரின் திருப்புகழும், நந்தூர் அலைவாயில் செந்தூர் முருகனை கந்துதல் இல்லாத சந்தமார்த்தமிழில் சிந்தை மகிழப்பாடிய பழம் பனுவல்களாகும்.

அகத்திய முனிவர் வழிபாடாற்றி அருள்பெற்ற ஊர், ஆதிசங்கரர் வழிபட்டு உடற்பிணி நீங்கப் பெற்று "சுப்பிரமணிய புஜங்கம்" என்ற தெய்வ மணங்கமழும் சிறந்த பாமாலை பாடியருளிய தலம் இது.

இத்தகைய புகழ் மணக்கும் இத்திருக்கோயிலில், நன்மை வெல்ல, தீமை அகல சூரபத்மனை வதைத்து வையத்தின் மக்கள் துயர் தீர்த்த முருகப் பெருமானின் "கந்த சஷ்டித்திருவிழா" 08.11.2018 அன்று தொடங்கி 19.11.2018 அன்று முடிவுறுகிறது. "சூரசம்ஹாரம்" 13.11.2018 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்குமேல் சூரசம்ஹாரத்திற்கு சுவாமி எழுந்தருளல், நடைபெற உள்ளது. முருகனடியார்கள் அனைவரும் வருகைபுரிந்து நோன்பு நோற்று கந்த சஷ்டி வேள்விச்சாலை பூஜையில் கலந்து கொண்டு வெள்ளி, செம்பு இரட்சைத் தகடுகள் அணிந்து செந்தில் வாழ்க் கந்தனின் திருவருள் பெற்றுய்ய அன்புடன் அழைக்கின்றோம்.

அடியார்தம் பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும் பேரும் கொடுக்கும் "பிள்ளைப் பெருமானை" தொழுவதால் பேராயிரம் பெற்று பெருவாழ்வு பெறுவர். எல்லா நலன்களும் ஈந்து மகிழ்வான் செந்தூர் முருகன்.

எனவே, "செந்திலடைந்து செழுங்கடலாடி, செந்திற்பதிபுரக்கும் செவ்வேளை சிந்தை நைந்துருகி சந்தமும் தொழ, திரை கடல் முழங்கும் செந்திலாதிபன் திருவருள் வாரிதியில் திளைத்துக்களித்திட திரண்டு வாரீர் திருச்செந்தூர் நோக்கி" என அன்புடன் மீண்டும் அழைக்கின்றோம்.

"வாழ்க ! எல்லா வளங்களும் நலன்களும்.
சூழ்க ! ஆயுளும் சுகமும் இனிதே
சூழ் கதிர் மதியுள வரை தொலையாச் செல்வமும்.
வாழ்க ! பல்லூழி வாழ்க செவ்விதினே"

**இரா.கண்ணன் ஆதித்தன்,** M.S.,(USA)
தக்கார்.

**பா.பாரதி,** B.L.,
இணை ஆணையர்/செயல் அலுவலர்

# 2018 - கந்தசஷ்டித் திருநாள்களின் விவரம்

## ஐப்பசி - 22 (08.11.2018) வியாழக்கிழமை 1-ஆம் திருநாள்

காலை : 5.30 மணிக்குமேல் 6.00 மணிக்குள் துலா லக்னத்தில் அருள்மிகு ஜெயந்திநாதப் பெருமான் யாகசாலைக்கு எழுந்தருளல்.

காலை : 7.30 மணிக்குமேல் யாகசாலை பூஜை ஆரம்பம்.

நண்பகல் : 12.00 மணியளவில் யாகசாலையில் தீபாராதனை.

நண்பகல் : 12.45 மணிக்குமேல், யாகசாலையில் இருந்து அருள்மிகு ஜெயந்திநாதர் தங்கச் சப்பரத்தில் எழுந்தருளி வேல் வகுப்பு, வீரவாள் வகுப்பு முதலிய பாடல்களுடன் மேளவாத்தியங்களுடனும், சண்முகவிலாசம் சேர்தல், பின்பு தீபாராதனை.

மாலை : 4.00 மணிக்குமேல் 4.30 மணிக்குள், திருவாவடுதுறை ஆதீன சஷ்டி மண்டபத்தில் அருள்மிகு ஜெயந்திநாதருக்கு அபிஷேக அலங்காரமாகி தங்க ரதத்தில் கிரி வீதி உலா வந்து திருக்கோயில் சேர்தல்.

## 2-ஆம் திருநாள் முதல் 5-ஆம் திருநாள் முடிய
## ஐப்பசி-23 (09.11.2018) வெள்ளிக்கிழமை முதல் ஐப்பசி - 26 (12.11.2018) திங்கட்கிழமை முடிய

காலை : 7.00 மணிக்கு யாகசாலை பூஜை ஆரம்பம்.

நண்பகல் : 12.00 மணியளவில் யாகசாலையில் தீபாராதனை.

நண்பகல் : 12.45 மணிக்குமேல், யாகசாலையில் இருந்து அருள்மிகு ஜெயந்திநாதர் தங்கச் சப்பரத்தில் எழுந்தருளி வேல் வகுப்பு, வீரவாள் வகுப்பு முதலிய பாடல்களுடன் மேளவாத்தியங்களுடனும், சண்முகவிலாசம் சேர்தல், பின்பு தீபாராதனை.

மாலை : 4.00 மணிக்குமேல் 4.30 மணிக்குள், திருவாவடுதுறை ஆதீன சஷ்டி மண்டபத்தில் அருள்மிகு ஜெயந்திநாதருக்கு அபிஷேக அலங்காரமாகி தங்கரதத்தில் கிரி வீதி உலா வந்து திருக்கோயில் சேர்தல்.

## ஐப்பசி-27 (13.11.2018) செவ்வாய்க்கிழமை 6-ஆம் திருநாள் (சூரசம்ஹாரம்)

காலை : 6.00 மணியளவில் யாகசாலை பூஜை ஆரம்பம்.

நண்பகல் : 12.00 மணியளவில் யாகசாலையில் தீபாராதனை.

நண்பகல் : 12.45 மணிக்குமேல், யாகசாலையில் இருந்து அருள்மிகு ஜெயந்திநாதர் தங்கச் சப்பரத்தில் எழுந்தருளி வேல் வகுப்பு, வீரவாள் வகுப்பு முதலிய பாடல்களுடன் மேளவாத்தியங்களுடனும், சண்முகவிலாசம் சேர்தல் பின்பு தீபாராதனை.

நண்பகல் : 2.00 மணிக்குமேல், திருவாவடுதுறை ஆதீன சஷ்டி மண்டபத்தில் அருள்மிகு ஜெயந்திநாதருக்கு அபிஷேக அலங்காரம் நடைபெறுதல்.

## அருள்மிகு ஜெயந்திநாதர் சூரசம்ஹாரத்திற்கு
## எழுந்தருளல் மாலை 4.30 மணிக்கு மேல் நடைபெறும்

சூரசம்ஹாரம் முடிந்த பின்பு சந்தோச மண்டபத்தில் சுவாமிக்கும் அம்பாளுக்கும் அலங்காரமாகித் தீபாராதனை நடைபெற்று கிரிப்பிரகாரம் உலா வந்து திருக்கோயில் சேர்தல். இரவு 108 மகாதேவர் சந்நிதி முன்பு சுவாமிக்கு சாயா அபிஷேகம் முடிவற்றபின் சஷ்டி பூஜைத் தகடுகள் கட்டுதல்.

## ஐப்பசி - 28 (14.11.2018) புதன்கிழமை 7-ஆம் திருநாள் (திருக்கல்யாணம்)

அதிகாலை : 5.00 மணிக்கு தெய்வானை அம்பாள் சேர்க்கையில் இருந்து தபசுக்கு புறப்படுதல்.

மாலை : மாலையில் அம்பாளுக்கு சுவாமி காட்சி அருளித் தோள்மாலை மாற்றுதல்.

இரவு : 11.00 மணிக்குமேல் அருள்மிகு தெய்வானை அம்பாளுக்கும் சுவாமிக்கும் திருக்கல்யாண வைபவம், திருக்கோயில் வளாக மேலைக்கோபுரம் முன்பு அமைந்துள்ள மண்டபத்தில் வைத்து நடைபெறுதல்.

## ஐப்பசி - 29 (15.11.2018) வியாழக்கிழமை 8-ஆம் திருநாள்

இரவில் : அருள்மிகு குமரவிடங்க பெருமான் தங்கமயில் வாகனத்திலும் அருள்மிகு தெய்வானை அம்பாள் பூம்பல்லக்கிலும், பட்டினப் பிரவேசம், திருவீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தல்.

## 9-ஆம் திருநாள் முதல் 11-ஆம் திருநாள் முடிய
## ஐப்பசி - 30 (16.11.2018) வெள்ளிக்கிழமை முதல் கார்த்திகை - 2 (18.11.2018) ஞாயிற்றுக்கிழமை முடிய

தினமும் மாலை : 6.00 மணியளவில் திருக்கல்யாண மண்டபத்தில் அருள்மிகு குமரவிடங்க பெருமான் தெய்வானை அம்பாளுடன் ஊஞ்சல் காட்சி.

## கார்த்திகை - 3 (19.11.2018) திங்கட்கிழமை 12-ஆம் திருநாள்

மாலை : 4.30 மணிக்குமேல் மஞ்சள் நீராட்டு, சுவாமியும் அம்பாளும் திருவீதி உலா வந்து திருக்கோயில் சேர்தல்.

## திருவிழா நாள்களில் திருக்கோயில் திருநடை திறப்பு விவரம்

8.11.2018 அதிகாலை 1.00 மணிக்கு நடைதிறந்து 1.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம்.

9.11.2018 முதல் 12.11.2018 முடிய அதிகாலை 3.00 மணிக்கு நடைதிறந்து 3.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம்.

13.11.2018 அதிகாலை 1.00 மணிக்கு நடைதிறந்து 1.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம்.

14.11.2018 அதிகாலை 3.00 மணிக்கு நடைதிறந்து 3.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம்.

இதர நாள்களில், தினந்தோறும் அதிகாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரைதொடர்ந்து நடைதிறந்திருக்கும்.

13.11.2018 மாலை சூரசம்ஹாரம் முடிவுற்றப் பின்னர் திருக்கோயில் விடுதிகள் மற்றும் அலுவலகத்தில் வேள்விச்சாலை பூஜையில் வைக்கப்பட்ட வெள்ளித்தகடுகள், செம்புத்தகடுகள் விற்பனை செய்யப்படும்.

வெள்ளித்தகடு விலை ரூ. 150.00 செம்புத்தகடு விலை ரூ. 50.00

யாகசாலை ஹோமப் பொருள்கள் உபயம் : தலைவர், சுவாமி திரு. அத்வைதானந்தா உழவாரப் பணிக்குழு, திருப்பரங்குன்றம்.
தலைவர், சுவாமி திரு. சுப்பிரமணியசுவாமி சேவா சமிதி, திருச்செந்தூர்.

யாகசாலை வர்ணம் உபயம் : திரு. செந்தில் மாரியப்பன் டேட்டா கார்ப் டிராபிக் பிரைவேட் லிமிடெட், பெங்களூர்-60.

தேவாரத் திருமுறை இன்னிசை : 8.11.2018 முதல் 13.11.2018 வரை திருக்கோயில் கலையரங்கில் வைத்து திரு. கி. சச்சிதானந்தம் குழுவினர், பழனி.

தேவாரத் திருமுறை இன்னிசை உபயம் : அலங்கார் திரு. ஆ. கந்தசாமிபிள்ளை குடும்பத்தினர், சென்னை.

## எதிர்வரும் மாசித் திருவிழா ஆரம்பம் 10.02.2019 மாசி மாதம் 27-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

## மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கப்பட்ட திருக்கோயில் அன்னதானத்திட்டம்

| திருக்கோயில் விவரம் | நாள் 1-க்கு | நிரந்தரவைப்பு நிதித்திட்டம் |
|---|---|---|
| 1. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் | ரூ.12,000/- | ரூ.1,75,000/- |
| 2. அருள்மிகு சிவக்கொழுந்தீஸ்வரர் திருக்கோயில், திருச்செந்தூர் | ரூ.3,000/- | ரூ.45,000/- |
| 3. அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில், கிருஷ்ணாபுரம் | ரூ.1,500/- | ரூ.25,000/- |
| 4. அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயில், நாசரேத் | ரூ.1,500/- | ரூ.25,000/- |
| 5.அருள்மிகு காஞ்சி விஜயகச்சி கொண்ட பாண்டீஸ்வரர் திருக்கோயில், குலசேகரன்பட்டினம் | ரூ.1,500/- | ரூ.25,000/- |

சிங்கப்பூர் கோவிந்தசாமிபிள்ளை கலையரங்கில் 08.11.2018 முதல் 13.11.2018 முடிய தினசரி காலை 5.00 மணிக்கு திருமுறை இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும். காலை 6.00 மணிக்கு "ஓம் சரவணபவாயநம" : பாராயணம், திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர் அவர்களால் நடத்தப்படும். காலை 7.00 மணிக்கு கந்தர் கலிவெண்பா முற்றோதுதல் ஈரோட்டிலுள்ள திருச்செந்தூர் கந்த சஷ்டி மன்றத்தாரால், தமிழ்நாடு திருக்கோயில் வாரியக் குழு ஆலோசகர் திருப்பனந்தாள் குருமகாசந்நிதானம் அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்
## 2018 கந்தசஷ்டித் திருவிழா கலையரங்க சொற்பொழிவு நிகழ்ச்சிநிரல்

### 08.11.2018 வியாழக்கிழமை 1-ஆம் திருவிழா

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 08.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : "தாயுமானவர்" |
| காலை | 09.00 | மணி | திரு. சு. முத்தரசு, கோவை. | பொருள் : "கந்த புராணம் காட்டும் வாழ்க்கை நெறி" |
| காலை | 10.00 | மணி | திருமதி. தேச.மங்கையர்கரசி, சென்னை. | பொருள் : "குண இன்பம்" |
| காலை | 11.00 | மணி | திரு. த.இராஜாராம், நாகர்கோவில். | பொருள் : "கண்டறியாதன கண்டேன்" |
| பகல் | 12.00 | மணி | திருமதி. திரு. கோ. வெங்கட்ஜீ, சென்னை. | பொருள் : "கந்தர் அநுபூதி" |
| பகல் | 01.00 | மணி | சிறுமி குறள்குடி உமையாள் மெய்யம்மை, காரைக்குடி. | பொருள் : "கந்த புராணம்" |
| பகல் | 02.00 | மணி | திருமதி. லதா கதிர்வேல், சென்னை. | பொருள் : "கந்த புராணத் தத்துவம்" |
| மாலை | 03.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : "ஓம் சரவணபவாய நம"-பாராயணம்' |
| மாலை | 04.00 | மணி | திரு. ச.திருமலைச்சாமி, பழனி. | பொருள் : "திருவடி மகிமை" |
| மாலை | 05.00 | மணி | திரு. கல்யாணராமன், திருச்சி. | பொருள் : "கந்தர் அலங்காரம்" |
| மாலை | 06.00 | மணி | திருமதி. வாசுகி மனோகரன், தூத்துக்குடி. | பொருள் : "அநுபூதி மகிமை" |
| இரவு | 07.00 | மணி | திரு. சுகி.சிவம், சென்னை. | பொருள் : "பக்தி முதல் முக்தி வரை" |
| இரவு | 08.00 | மணி | நாகை முகுந்தன், சென்னை. | பொருள் : "கிடைத்தது சிவம்" |
| இரவு | 09.00 | மணி | திருமதி ர. புவனேஸ்வரி, திருப்பூர். | பொருள் : "செந்தில் மேவிய சேவகன்" |

### 09.11.2018 வெள்ளிக்கிழமை 2-ஆம் திருவிழா

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 08.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : "திருப்புகழ்" |
| காலை | 09.00 | மணி | திரு. சு.முத்தரசு, கோவை. | பொருள் : "கந்த புராணம் காட்டும் வாழ்க்கை நெறி" |
| காலை | 10.00 | மணி | திருமதி. தேச.மங்கையர்கரசி, சென்னை. | பொருள் : "துறவு இன்பம்" |
| காலை | 11.00 | மணி | திரு. த.இராஜாராம், நாகர்கோவில். | பொருள் : "அறமும் அன்பும்" |
| பகல் | 12.00 | மணி | திரு. பொன்.வேலுமயில், திருநெல்வேலி. | பொருள் : "சூட்டிய திருவடி" |
| பகல் | 01.00 | மணி | திருமதி. மீனாட்சி பிரியாந்த், மதுரை. | பொருள் : "பதினெட்டு சித்தர்கள்" |
| பகல் | 02.00 | மணி | திருமதி. லதா கதிர்வேல், சென்னை. | பொருள் : "பேராசை எனும் பிணியில்" |
| மாலை | 03.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : "ஓம் சரவணபவாய நம"-பாராயணம் |
| மாலை | 04.00 | மணி | திரு. ச.திருமலைச்சாமி, பழனி. | பொருள் : "சீர்மிகு சிறுத்தொண்டர்" |
| மாலை | 05.00 | மணி | திரு. கல்யாணராமன், திருச்சி. | பொருள் : "திருப்புகழில் இதிகாசம்" |
| மாலை | 06.00 | மணி | திருமதி. வாசுகி மனோகரன், தூத்துக்குடி. | பொருள் : "அலங்கார மகிமை" |
| இரவு | 07.00 | மணி | திரு. சுகி.சிவம், சென்னை. | பொருள் : "பக்தி முதல் முக்தி வரை" |
| இரவு | 08.00 | மணி | நாகை.முகுந்தன், சென்னை. | பொருள் : "உதித்தது ஆறுமுகம்" |
| இரவு | 09.00 | மணி | திருமதி. ர.புவனேஸ்வரி, திருப்பூர். | பொருள் : "என்றும் வாய்த்த துணை" |

### 10.11.2018 சனிக்கிழமை 3-ஆம் திருவிழா

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 08.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : "திருவாசகம்" |
| காலை | 09.00 | மணி | திரு. சு. முத்தரசு, கோவை. | பொருள் : "கந்த புராணம் காட்டும் வாழ்க்கை நெறி" |
| காலை | 10.00 | மணி | திருமதி. தேச.மங்கையர்கரசி, சென்னை. | பொருள் : "பிறவி இன்பம்" |
| காலை | 11.00 | மணி | திரு. த.இராஜாராம், நாகர்கோவில். | பொருள் : "குருவும் சீடரும்" |
| பகல் | 12.00 | மணி | செல்வி. மு.ச.பிரஷா, ஆறுமுகநேரி | பொருள் : "சிவத்தின் சாமி" |
| பகல் | 01.00 | மணி | திருமதி. ந. லெட்சுமி சங்கரநாராயணன், திருநெல்வேலி. | பொருள் : "சித்தமெல்லாம் சிவமே" |
| பகல் | 02.00 | மணி | திருமதி. ஜா. கோமதி திருநாவுக்கரசு, | பொருள் : "வீரபாகு தூது" |
| மாலை | 03.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : "ஓம் சரவணபவாய நம" - பாராயணம் |
| மாலை | 04.00 | மணி | திரு. ச.திருமலைச்சாமி, பழனி. | பொருள் : "தர்மத்தின் சிறப்பு" |
| மாலை | 05.00 | மணி | திரு. கல்யாணராமன், திருச்சி. | பொருள் : "நள சரித்திரம்" |
| மாலை | 06.00 | மணி | திருமதி. வாசுகி மனோகரன், தூத்துக்குடி. | பொருள் : "திருப்புகழ் மகிமை" |
| இரவு | 07.00 | மணி | திரு. சுகி.சிவம், சென்னை. | பொருள் : "பக்தி முதல் முக்தி வரை" |
| இரவு | 08.00 | மணி | நாகை.முகுந்தன், சென்னை. | பொருள் : "குருவும் சீடனும்" |
| இரவு | 09.00 | மணி | திருமதி. ர.புவனேஸ்வரி, திருப்பூர். | பொருள் : "உத்தமர் தம் உறவு வேண்டும்" |

### 11.11.2018 ஞாயிற்றுக்கிழமை 4-ஆம் திருவிழா

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 08.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : "பாரத பண்பாடு" |
| காலை | 09.00 | மணி | திருமதி. ம.தமிழ்ச்செல்வி, பழனி. | பொருள் : "முருகன் பெருமை" |
| காலை | 10.00 | மணி | திருமதி. தேச.மங்கையர்கரசி, சென்னை. | பொருள் : "முக்தி இன்பம்" |
| காலை | 11.00 | மணி | திரு. த.இராஜாராம், நாகர்கோவில். | பொருள் : "அடியார்க்கு நல்லபெருமாள்" |
| பகல் | 12.00 | மணி | திரு. கு.கதிரேசன், திருச்செந்தூர். | பொருள் : "கந்தன் கருணை" |
| பகல் | 01.00 | மணி | திரு. ச.திருமலைச்சாமி, பழனி. | பொருள் : "தாய் சொல்லே மந்திரம்" |
| பகல் | 02.00 | மணி | திருச்செந்தூர் வியக்திவிகாஸ் கேந்த்ரா வாழும்கலை சார்பாக சுவாமிஜி சூரியபாதா | பொருள் : "சத்சங்கம்" |
| மாலை | 05.00 | மணி | திரு. கல்யாணராமன், திருச்சி. | பொருள் : "இரு நண்பர்கள்" |
| மாலை | 06.00 | மணி | திருமதி. வாசுகி மனோகரன், தூத்துக்குடி. | பொருள் : "அந்தாதி மகிமை" |
| இரவு | 07.00 | மணி | திரு. சுகி.சிவம், சென்னை. | பொருள் : "பக்தி முதல் முக்தி வரை" |
| இரவு | 08.00 | மணி | நாகை.முகுந்தன், சென்னை. | பொருள் : "மனிதனும் தெய்வமாகலாம்" |
| இரவு | 09.00 | மணி | திருமதி. ர.புவனேஸ்வரி, திருப்பூர். | பொருள் : "நிலையான மாதவம்" |

## 12.11.2018 திங்கட்கிழமை 5-ஆம் திருவிழா

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 08.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : "கந்தர் அனுபூதி" |
| காலை | 09.00 | மணி | திரு. க. முத்தரசு, குவைத் | பொருள் : "கந்த புராணம் காட்டும் வாழ்க்கை நெறி" |
| காலை | 10.00 | மணி | திருமதி. தேச.மங்கையர்க்கரசி, சென்னை. | பொருள் : "கொடை இன்பம்" |
| காலை | 11.00 | மணி | திரு. த.இராஜாராம், நாகர்கோவில். | பொருள் : "முத்தமிழின் முதல்வன்" |
| பகல் | 12.00 | மணி | திரு. ஆ.மணிமுருகன், அம்பை | பொருள் : "தொண்டர் தீவினை தீர்ப்பவன்" |
| பகல் | 01.00 | மணி | விக்கிரமசிங்கபுரம் பாரதி திரு. கண்ணன் | பொருள் : "வருவான் வடிவேலன்" |
| பகல் | 02.00 | மணி | திரு. ச.திருமலைச்சாமி, பழனி. | பொருள் : "முருகனே முதல்வன்" |
| மாலை | 03.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : "ஓம் சரவணபவாய நம"-பாராயணம் |
| மாலை | 04.00 | மணி | திருமதி. கவிதா ஜவகர், இராசபாளையம். | பொருள் : "யாதுமாகி நின்றாய்" |
| மாலை | 05.00 | மணி | திரு. கல்யாணராமன், திருச்சி. | பொருள் : "பட்டினத்தார்" |
| மாலை | 06.00 | மணி | திருமதி. வாசுகி மனோகரன், தூத்துக்குடி. | பொருள் : "ஆறுமுக மகிமை" |
| இரவு | 07.00 | மணி | திரு. சுகி.சிவம், சென்னை. | பொருள் : "பக்தி முதல் முக்தி வரை" |
| இரவு | 08.00 | மணி | நாகை.முகுந்தன், சென்னை. | பொருள் : "வேலும் மயிலும்" |
| இரவு | 09.00 | மணி | திருமதி. ர.புவனேஸ்வரி, திருப்பூர் | பொருள் : "அடியார்க்கு எளிய பெருமாள்" |

## 13.11.2018 செவ்வாய்க்கிழமை 6-ஆம் திருவிழா

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 08.00 | மணி | ஸ்ரீமத் சுவாமி நியமானந்தர், திருப்பராய்த்துறை. | பொருள் : "பகவத் கீதை" |
| காலை | 09.00 | மணி | சைவத்திரு. கனகராஜன், நாகர்கோவில். | பொருள் : "பச்சைச் சாந்தி மகிமை" |
| காலை | 10.00 | மணி | திரு. தெரிசை பொ.அய்யப்பன், ஆறுமுகநேரி | பொருள் : "அன்னதான மகிமை" |
| காலை | 11.00 | மணி | திரு. ஆ. மணிமுருகன், அம்பை | பொருள் : "பிஞ்சிலே பழுத்தாலும் துவர்ப்பு இல்லை" |
| பகல் | 12.00 | மணி | திருமதி. கவிதா ஜவகர், இராசபாளையம். | பொருள் : "மாருதியின் மாண்பு" |
| பகல் | 01.00 | மணி | சிவ. அ.வீ.பா. மோகனசுந்தரம், திருச்செந்தூர். | பொருள் : "வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை" |
| பகல் | 02.00 | மணி | காரைக்கால் திருமதி. ந.விஜயலெட்சுமி | பொருள் : "சூரசம்ஹாரத் தத்துவம்" |
| மாலை | 03.00 | மணி | திரு. பாமணி, திருநெல்வேலி | பொருள் : "கந்தன் காலடியை வணங்குவோம்" |

## திருக்கல்யாணம் 14.11.2018 புதன்கிழமை 7-ஆம் திருவிழா

### கலையரங்கம்

| | |
|---|---|
| திருக்கல்யாண சிறப்பு நாகஸ்வர இன்னிசை | : மேல்சாணங்குப்பம். திரு. மே.ம.நாராயணன் குழுவினர் |
| திருக்கல்யாண சிறப்புத்தவில் | : நாஞ்சில் திரு.நா.கி. இராமதாசு. |
| சிறப்புத்தவில் நாகஸ்வர உபயம் | : திரு.வி. சிற்றரசு ராயன், கரூர். |
| திருக்கல்யாண பொருள்கள் உபயம் | : திரு. ச. சங்கர ராமசாமி ஆதித்தன், காயாமொழி. |

**கந்த சஷ்டித் திருவிழா - யாகசாலை பூஜை, சூரசம்ஹாரம் மற்றும் திருக்கல்யாண நிகழ்வுகளை அகன்ற திரை மற்றும் LED TV மூலம் ஒளிபரப்பு உபயம்: " நியூஸ் 7 " தமிழ்த் தொலைக்காட்சி நிறுவனம்**

## கந்த சஷ்டித் திருவிழா நிகழ்ச்சி உபயதாரர்கள்

* திரு. அ.வே.மா. மாரிமுத்து நாடார் அன் சன்ஸ் குடும்பத்தார்கள்.
  ஏ.வி.எம்.நகை மாளிகை, பவுன் மார்க் தேங்காய் எண்ணெய் வியாபாரம், தூத்துக்குடி.
* முனைவர். திரு. கண. காத்தமுத்து, திருமதி. சுந்தரி காத்தமுத்து, தலைவர், ஜி.கே.எம்.பொறியியல் கல்லூரி, கல்விக்குழுமம் சென்னை, மானாமதுரை மற்றும் பெரியகுளம்.
* திரு. பா. இரகுபதி மற்றும் திரு. ரா. சரவணபாண்டியன், சிவசக்தி நிதி நிறுவனம், பரமன்குறிச்சி.
* திரு. பி. இராமசாமி பண்ணையார், சத்திரப்பட்டி.
* திருமதி. ந. செந்தாமரை, ஜே.கே.கே.ரெங்கம்மாள் அறக்கட்டளை, குமாரபாளையம்.
* திரு. நா. சிவானந்த ஜோதி மற்றும் வி. யோகநாதன், லண்டன்.
* திரு. சிவ. இராம. அ. நடராஜ முதலியார் குடும்பத்தார், அம்பாசமுத்திரம்.
* திரு. சி.ரா.ஆ.பெ. மாரி, மற்றும் திருமதி. மா. சுந்தரி, சி.ராமையா பிள்ளை அறக்கட்டளை, பச்சேரி.
* திரு. டி.எஸ்.கிருஷ்ணபாபு மூலைப்பொழி, திருச்செந்தூர்.
* திரு. வ.நு. ராஜ், திரு வ.நு. சங்கர், தோட்டப்பாளையம், வேலூர்.
* திரு. சண்முகம், அரசு ஒப்பந்தக்காரர், (வனத்துறை) வேல் முருகன் மனைகள் விற்பனையகம், வேலூர்,
* திரு. சி. ராஜபாண்டி, திருமதி. அற்புதமணி , உதிரமாடன்குடியிருப்பு.
* திரு. ச. பாலமுருகன் மற்றும் திரு. சு. ராம்குமார், சங்கரன்கோவில்.
* கொம்மடிக்கோட்டை, திரு. சு.வ. திருஞானம், வாலை குரு ஸ்டோர், சென்னை.
* திரு. இரா. கோதண்டம், கார்த்திக் தொழிலகம், கீழ்க்கட்டளை, சென்னை
* திரு. கல்யாணகுமார் மற்றும் குமாரர்கள், பேயன்விளை.
* திரு. வி. சண்முகவடிவேலு, நன்னிலம், திருவாரூர்.
* திரு. கா.ச.தவமணி, நியூ லைப் கேர் நிறுவனம், இராசபாளையம்.
* திரு. முத்து செல்வம், திருமதி. ஜெயலட்சுமி குடும்பத்தினர், சேலம்.
* திரு. அ. அருண் (எ) அங்கப்பன், குடும்பத்தார், தேவர் பிலிம்ஸ், மேட்டூர் அணை.
* திரு. நா.கு. மணி, நாராயணன் அன் சன்ஸ், சின்னமனூர்.
* ஜெயந்திநாதர் எண்டர்பிரைசஸ், சென்னை.
* திரு இரா. துரை பெயிண்டர் குமாரர்கள் திரு. து. செல்வ ரமேஷ், திரு. து. ரவிசங்கர், திருநெல்வேலி.
* திரு. சி.சண்முகசுந்தரம், நகைமாளிகை, குலசேகரபட்டினம்.

**கந்த சஷ்டித் திருவிழா ஆறு நாள்களும் வேள்விச்சாலை பூஜை கட்டளைதாரர் :**

- சென்னை தேவர் பிலிம்ஸ், தண்டாயுதபாணி பிலிம்ஸ் உரிமையாளர்
  தெய்வத்திரு. ம.மு.அ. சின்னப்பாத்தேவர் அவர்கள் திருக்குமாரர் திரு. ம.மு.அ.சி. தண்டாயுதபாணி

**கந்த சஷ்டித் திருவிழா ஆறு நாள்களும் வேள்விச்சாலை பூஜை செலவுகள் உபயம் :**

- திரு. ம.மு.அ. மாரியப்பத்தேவர், திருமதி. மா. தனலட்சுமி அவர்கள் திருக்குமாரர்கள்
  திரு. மா. சரவணன், திரு. மா. குமரன், சென்னை.
- திரு. மா. சரவணன் அவர்கள் குமாரர், திரு. ச. விக்னேஷ், சென்னை
- தலைவர், ஸ்பிக் நிறுவனம், தூத்துக்குடி மற்றும் சென்னை.

**திருக்கல்யாண தாம்பூலம் லட்டு பிரசாதம், (மஞ்சள்,மஞ்சள்கயிறு,விபூதி,குங்குமம்) மஞ்சள்துணிப்பை, பிரசாத உறை உபயதாரர்கள் மூலம் பெறப்பட்டு திருக்கல்யாணம் மொய் பிரசாதம் தயார் செய்யப்படுகிறது**



சூரனை இரு கூறாக்கி மயில் வாகனமாக, சேவல் கொடியாக ஆட்கொள்ளும் காட்சி



சூரனை வதைத்த வேலின் உக்கிரத்தைத் தணிக்க, கடற்கரையில் வேலினைப் பாய்ச்சி நாழிக்கிணறு தீர்த்தம் உருவாகிய காட்சி

**திருவிழா அழைப்பிதழ் உபயதாரர்**

முனைவர். தி. செந்தில்வேள், பிரதம அறங்காவலர், அருள்மிகு பூபாலவிநாயகர் திருக்கோயில், சமாதான நீதிவான், கொழும்பு.
தெய்வத்திரு. லவ்லி, திரு. சி. கடற்கரை அவர்கள், தொழிலதிபர், லவ்லி ஆப்செட் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்., சிவகாசி.
திருவிழா அழைப்பிதழ் கவரொட்டி உபயம் : திரு. தி. வெங்கடாஜலபதி, ஸ்ரீ மகாலட்சுமி டிரேடிங் குரூப்ஸ், சிவகாசி.

இத்திருக்கோயில் பற்றிய விவரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய
இணையதளம் : www.tiruchendurmurugantemple.tnhrce.in
மின் அஞ்சல் : tiruchendurmurugan@tnhrce.org

திருவிழாவில் கலந்து கொண்டு செந்திலாண்டவரின் அருள் பெற அன்புடன் அழைக்கின்றோம் !
இவண் : திருக்கோயில் நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள்.

**பிளாஸ்டிக்கை தவிர்ப்பீர் ! சுற்றுச்சூழலை பாதுகாப்பீர் !!**



திருச்சீரலைவாய், சூரசம்ஹாரம் - திருக்காட்சி